ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2164/2 - 2020 පෙබරවාරි මස 24 වැනි සඳුදා - 2020.02.24
*2164/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இலக்கம்: THI/LND/L2/ACQVI/136.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தின், திஹகொட பிரதேச செயலகப் பிரிவில் 334, யடியன கிராம அலுவலர் பிரிவில், ஹொரொன்துவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்திற்கு பதிலாக மாத்தறை மாவட்டத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப திட்டப்படத்தின் இலக்கம் 2827 மற்றும் 2019.12.03 ஆந் திகதிய திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 01 என காட்டப்பட்டுள்ள மொத்தக் காணி விஸ்தீரணத்திலிருந்து 0.1074 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் காணித்துண்டின் விபரம்:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தென்னஹேன அல்லது பதின்நாகொட கன்தேஹேன மற்றும் இலுக்ஹேனேகொடெல்ல அல்லது அல்ஹேன; விபரம்: திறந்த தரிசு நிலம், கட்டுமான நிலையிலுள்ள நீர்தாங்கிக் கோபுரம்; விஸ்தீரணம்: 0.1074 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு திஹகொட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரித்துக்கோரல் சம்பந்தமான காணி உறுதி ஆகியவற்றை விசாரணையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உமேஷா சுரங்கி மாதறகே,
பிரதேச செயலாளர்,
திஹகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட,
2020, பெப்புருவரி 19.

03 - 221